**Under Section 173 BNSS**

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120348

1. District மாவட்டம் : விழுப்புரம் PS: காவல்நிலையம் ல.ஒ.த பிரிவு Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 06 Date: நாள் 23.04.2025

2. (i) Act சட்டம்: Prevention of corruption Sections பிரிவுகள்: 7 of PC Act
   (ii) Act சட்டம்: Act . 1988 Amended Act - 2018 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 22.4.2025 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு சுமார் 18:00 மணி Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.4.2025 Time : நேரம் 08:00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23.04.2025 Time : நேரம் 09.45 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 1/2 km வடமேற்கில்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி விழுப்புரம் வட்டாட்சியர் அலுவலக, நில அளவை பிரிவு
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. ஏழுமலை (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கோதண்டம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 32 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி எண் - 36, நர்மதா நகர், குமாரகுப்பம் வளவனூர், விழுப்புரம் வட்டம் & மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. திரு. ஸ்டாலின், சர்வேயர் விழுப்புரம் தாலுக்கா அலுவலகம்.
   2. திரு. சென்னன், கிராம உதவியாளர், நரையூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

[illegible]. தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

[signature] 23/04/2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

23.04.2025 / 10:00 மணி

Name: பெயர் G. [illegible]
Rank: நிலை .....................No. எண் ..........

காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு
விழுப்புரம்

Submitted: On 23.04.2025 at about 08.00 hrs, while I was in my office, one Tr.G.Elumalai, S/o.Kothandam residing at Narmatha Nagar, Kumarakuppam, Valavanur village, Villupuram & District approached my detachment office and lodged a written complaint which read as follows:-அனுப்புநர் G.ஏழுமலை வ/32, த/பெ.கோதண்டம், 36, நர்மதா நகர், குமாரகுப்பம், வளவனூர், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 9791811215 பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம். ஐயா, நான் வளவனூர் குமாரகுப்பத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர். அதில் எனது மூத்த சகோதரி லட்சுமி என்பவருக்கு நரையூர் கிராமத்தினை சேர்ந்த ராஜி த.பெ சுப்பரமணி என்பவருடன் திருமணமாகி அவருடன் வசித்து வருகிறார். எனது மாமா ராஜி த.பெ சுப்பரமணி என்பவர் நரையூரைச்சேர்ந்த சரசு என்பவரிடமிருந்து நரையூர் அயன் புஞ்சை சர்வே எண்-392/9A ல் 1.16 ஏக்கரில் 31 சென்ட்டில் அமைந்துள்ள அங்காள பரமேஸ்வரி நகரில் உள்ள மனைப்பிரிவில் மனை எண் 7ல் 1347 1/2 சதுர அடி காலி மனையினை வளவனூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 1189/2017ன் படி கிரையம் வாங்கினார். இந்நிலையில் கடந்த 07.04.2025 ம் தேதி நரையூர் உள்ள எனது மாமா வீட்டிற்கு நான் சென்றிருந்தபோது, எனது மாமா என்னிடம் நான் தினமும் கொத்தனார் வேலை செல்வதால் 2017 ல் வாங்கிய மேற்படி மனையினை பட்டா மாற்றாமல் விட்டுவிட்டதாகவும், பட்டா மாற்றுவதற்கான வேலையை செய்ய வேண்டும் என்று சொன்னார். எனவே நான் எனது மாமாவுடன் சென்று 07.04.2025 ம் தேதி ஆன்லைன் மூலமாக பட்டா மாற்றுவதற்காக விண்ணப்பித்தோம். அதன் பிறகு 18.04.2025 ம் தேதி விழுப்புரம் தாலுக்கா அலுவலக சர்வேயர் ஸ்டாலின் என்பவர் 8925856545 என்ற எண்ணிலிருந்து எனது மாமாவின் செல் நெம்பர் 9626883355-க்கு போன் செய்து, உங்களது பட்டா மாற்றுவதற்கான விண்ணப்பம் என்னிடம்தான் உள்ளது. நாளை 19.04.2025 ம் தேதி 10.30 மணிக்கு உங்களது மனையினை அளக்க வருகிறோம் என்று தகவல் சொன்னதாக எனது மாமா என்னிடம் சொன்னார். அதனால் 19.04.2025 ம் தேதி நானும் எனது மாமா வீட்டிற்கு போனேன். அன்றைய தினம் மதியம் சுமார் 02.30 மணிக்கு சர்வேயர் ஸ்டாலின் மற்றும் நரையூர் கிராம உதவியாளர் கிருஷ்ணன் ஆகியோர் நரையூருக்கு வந்து மனை சம்மந்தப்பட்ட ஆவணங்களை கேட்டார்கள். விழுப்புரம் தாலுக்கா அலுவலக சர்வேயர் ஸ்டாலின் அவர்களிடம் எனது மாமா மனை வாங்கியது சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும் கொடுத்து விட்டு, நான் வேறு வேலை

காரணமாக சென்றுவிட்டேன். அதன் பிறகு மனையை அளந்து முடித்துவிட்டு, சர்வேயர் ஸ்டாலின் மேற்படி ஆவணங்களை எனது மாமாவிடம் கொடுத்துவிட்டு, 21.04.2025-ம் தேதி எனக்கு போன் செய்துவிட்டு வந்து என்னை சந்திக்கும்படி சொல்லிவிட்டு சென்றுவிட்டதாக எனது மாமா ராஜி என்னிடம் சொன்னார். சர்வேயர் ஸ்டாலின் சொன்னது போலவே, நான் 21.04.2025-ம் தேதி காலை சுமார் 09.10 மணிக்கு சர்வேயர் ஸ்டாலினுக்கு போன் செய்து எங்கு வரவேண்டும் சார் என்று கேட்டேன். அதற்கு அவர் நரையூர் கிராம உதவியாளர் கிருஷ்ணனை போய் பாருங்கள் அவர் அடுத்து என்ன செய்யவேண்டும் என்பதை சொல்வார் என்று சொன்னார். சர்வேயர் ஸ்டாலின் சொன்னது போலவே நானும் எனது மாமாவும் மனை வாங்கியது சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும் எடுத்துக்கொண்டு நரையூர் கிராம நிர்வாக அலுவலகம் சென்று பார்த்தபோது அலுவலகம் மூடி கிடந்தது. எனவே நாங்கள் இருவரும் வீட்டிற்கு திரும்பி வந்து விட்டோம். மறுநாள் 22.04.2025-ம் தேதி எனது மாமா கொத்தனார் வேலைக்கு செல்வதாகவும் அதனால் என்னால் அடிக்கடி அலைய முடியாது இனி நீயே இந்த பட்டா மாற்றும் வேலையை நீயே பார்த்துக்கொள் என்று சொன்னார். நானும் சரி மாமா என்று சொல்லிவிட்டு காலை சுமார் 10.30 மணிக்கு நரையூர் கிராம நிர்வாக அலுவலகம் சென்று கிராம உதவியாளர் கிருஷ்ணனை பார்த்தோம். அவரிடம் சர்வேயர் ஸ்டாலின் சார் உங்களை பார்க்க சொன்னார் என்று சொன்னேன். அவர் உடனே சர்வேயர் ஸ்டாலினுக்கு போன் செய்து பேசிவிட்டு, உங்களது மாமாவின் மனையினை பட்டா மாற்றம் செய்ய, ரூ.3,500/- கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், எதற்கு சார் இந்த தொகை இது அரசு கட்டணமா என்று கேட்டேன். அதற்கு அவர் இல்லை இந்த பணம் எனக்கும் சர்வேயருக்கும் தான், பணம் கொடுத்தால்தான் வேலை நடக்கும் என்று சொன்னார். அதற்கு நான் சரிங்க சார் நான் எனது மாமாவிடம் சொல்லி பணம் வாங்கி வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்து எனது மாமாவிடம் நடந்த விஷயத்தை சொன்னேன். அதற்கு அவர் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்றும் சர்வேயர் சாரிடம் சொல்லிவிடு என்று சொன்னார். நான் எனது மாமா சொன்னது போலவே மாலை சுமார் 06.00 மணிக்கு சர்வேயர் ஸ்டாலினுக்கு போன் செய்து சார் நீங்கள் சொன்னது போல கிராம உதவியாளர் கிருஷ்ணனை போய் பார்த்தேன். அவர் நீங்கள் கேட்டதாக ரூபாய் 3,500/- கேட்டார். பணம் கேட்ட விஷயத்தை எனது மாமாவிடம் சொன்னேன். அதற்கு எனது மாமா அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று சொன்னார் என்ற விபரத்தை சொன்னேன். அதற்கு சர்வேயர் ஸ்டாலின் கடைசியாக ரூபாய் 3,000/- கொடுத்தால் பட்டா மாற்றும் வேலை முடியும் என்றும் ரூபாய் 3,000/- கொடுக்காவிட்டால் உனது மாமாவின் மனுவினை முடித்துவிடுவேன் என்றும் பணத்தை

ரெடி பண்ணிவிட்டு போன் பண்ணுங்க என்றும் அந்த பணத்தை என்னிடமோ அல்லது நான் சொன்னால் கிராம உதவியாளர் கிருஷ்ணணிடமோ கொடுக்கவேண்டும் என்று சொன்னார். அதற்கு நான், சார் எனது மாமாவிடம் சொல்லி பணத்தை ரெடி பண்ணிவிட்டு போன் செய்கிறேன் சார் என்று சொல்லி போனை வைத்துவிட்டேன். சர்வேயர் ஸ்டாலின் ரூபாய் 3,000/- கேட்ட விஷயத்தை எனது மாமாவிடம் சொன்னேன். எனது மாமாவிற்கு லஞ்சம் கொடுத்து பட்டா மாற்ற விருப்பம் இல்லாததால், அவர் தினமும் கொத்தனார் வேலைக்கு செல்வதால், மனையை அளந்து பட்டா மாற்ற ரூபாய் 3,000/- லஞ்சமாக கேட்கும் சர்வேயர் ஸ்டாலின் மற்றும் கிராம உதவியாளர் கிருஷ்ணன் ஆகியோர் மீது லஞ்ச ஒழிப்பு துறையில் என்னை புகார் கொடுக்க சொன்னார். எனவே விழுப்புரம் லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம் வந்து நான் தயார் செய்து கொண்டு வந்த புகார் மனுவினை இன்று தங்களிடம் கொடுக்கின்றேன். எனவே, பட்டா மாற்றம் செய்ய ரூ.3,000/- லஞ்சமாக கேட்கும் விழுப்புரம் தாலுக்கா அலுவலக சர்வேயர் ஸ்டாலின் மற்றும் நரையூர் கிராம உதவியாளர் கிருஷ்ணன் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, xxxxxx (G.Elumalai) நாள்:23.04.2025.

Madam,

Received the above written complaint on 23.04.2025 at about 08.00 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Villupuram Vigilance and Anti-Corruption Cr.No.06/2025/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.00 hrs today on 23.04.2025 and took up for Investigation. on 23.04.2025 (G.Alagesan) Deputy Supertendent of Police, V&AC, VPM.

The original FIR along with a the original written complaint in a sealed cover are sent to the Special Judge for cases under The Prevention of Corruption Act, Villupuram and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

23/04/2025

(G.Alagesan)
Deputy Supertendent of Police,
Vigilance and Anti-Corruption,
Villupuram.